பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# ...துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்துவருவதில்லை...

நாகூம் 1:15

Happy New Year

செய்தி மலர்
2022
ஜனவரி

இதழ் : 9
மலர் : 18



# சபை ஊழியரின் அன்பு மடல்



கர்த்தரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சபையார் யாவரையும் அன்போடு வாழ்த்துகிறேன். 2021ஆம் ஆண்டை சுகத்தோடும் , பெலத்தோடும், முழு ஜீவனோடும் காண செய்த தேவாதி தேவனை நாம் அனைவருமாக சேர்ந்து,ஒருமனதோடு ஸ்தோத்தரிப்போம். கடந்த இக்கட்டான சூழ்நிலைகளில், கடந்த ஆண்டு முழுவதும் காத்து வந்த தேவாதி தேவனை, ராஜாதி ராஜனை நன்றி சொல்லி ஸ்தோத்தரிக்கின்றேன்."தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள். நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்" (கொலோ 3:15).

கடந்த மாதம் முழுவதும் அநேக விஷேசித்த ஆராதனைகளை நடத்தி தேவ நாமத்தை மகிமைபடுத்த கர்த்தர் கிருபை செய்தார். பாடல் குழுவினரின் பாடல் ஆராதனை , சபையின் கிறிஸ்மஸ் ஆராதனை, குடும்ப பாடல் ஆராதனை எல்லாவற்றிலும் கர்த்தரின் நாமம் மகிமைப்பட்டது. பங்கெடுத்த அனைவரையும் இம்மானுவேலராகிய நமது ஆண்டவரின் ஆசீர்வாதங்களினால் நிரப்புவார்.

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்.அந்த பாலகன் இயேசு கிறிஸ்து நமது உள்ளத்திலும், இல்லத்திலும் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் நிலைநிறுத்தி வருகின்ற புதிய ஆண்டில் பிரவேசிக்க கிருபை செய்வாராக.
இந்த 2022–ஆம் ஆண்டில் கர்த்தர் நமது சபைக்கு வாக்கு கொடுக்கிறார் . .

**"துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்துவருவதில்லை" நாகூம் 1:15.**

ஆம் பிரியமானவர்களே நாமும், நம்மை சார்ந்த அநேகரும், கடந்த இரண்டு வருட காலங்கள் கடந்து வந்த பாதைகளை நம் ஆண்டவர் நன்றாய் அறிவார். எத்தனை, எத்தனை துஷ்டமான காரியங்கள், சூழ்நிலைகள், இழப்புகள், வியாதி, மனசஞ்சலங்கள், பயம், ஆதரவற்ற நிலை. . .

உன் பிராணன் சஞ்சலத்தினாலும், என் வழுஷங்கள் தவிப்பினாலும் கழிந்துபோயிற்று . . . (சங் 31:10) ஆனாலும் என் கர்த்தாவே "உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷன், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கனள்" "ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயனால் உன் பெலன் குறுகினது". நமக்கெதிராய் வரும் அநேக உபத்திர நேரங்களிலும் இன்னல் மிகுந்த நேரங்களிலும், நாம் சோர்ந்து போகக்கூடாமல் கர்த்தர் காப்பார். பிசாசின் சோதனைகளை மேற்கொள்ள பெலன் கொடுத்து தாங்குவார். அந்த பெலன் தேவ பெலனாக இருக்கவேண்டும், நாம் அதனை சுதந்தரித்துக் கொள்ள நம் இருதயம் சுத்தமுள்ளதாக, அவர் தங்கும் ஆலயமாக இருக்கவேண்டும். நீதியுள்ள வாழ்வை வாழமுற்படுவோம்.

துன்மார்க்கன் துஷ்டருடைய வலையை விரும்புகிறான். நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும் (நீதி 12:12)
அநேக நேரங்களிலே தீமையான காரியங்கள் மற்றும் விரோதிகள் நம் வாழ்வில் துரோகங்களை கொண்டு வந்து நம்மை பெலவீனப்படுத்த முற்படலாம், ஆனால் அந்த நேரங்களில் எல்லாம் நாம் கர்த்தருக்குள் நிலைத்திருந்து, அவர் பாதத்தில் அமர்ந்து ஆலோசனைகளைப் பெற்று, கர்த்தரை பாடி துதித்து, தேவ பெலன் கொள்ள கர்த்தர் கிருபை செய்வார்.

"துஷ்டனுடைய துரொகத்தில் கண்ணியிருக்கிறது, நீதிமானோ பாடி மகிழ்கிறான்" நீதி29:6.

பெலிஸ்தனைப்போல நம்முன்பாக அநேக எதிராளிகள் வரலாம், நாமும் அவர்களுக்கு முன்பாக ஒன்றும் அறியாத சிறுபிள்ளைகளைப் போல இருக்கலாம், மற்றும் செய்வதறியாது தவிக்கிறவர்களாகவும் இருக்கலாம். பிரியமான தேவ ஜனமே சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்ற விசுவாசம் சற்றும் குறைந்துவிடக்கூடாது கர்த்தரை நோக்கிப்பார்த்து, ஜீவனுள்ள தேவனுடைய பிள்னைகளாக எதிரிகளை முறியடிக்க முற்படுவோம். தாவீதிற்க்கு ஒரு சிறிய கல்லும், கவனும் கிடைத்தது போல நமக்கு இருக்கும் விசுவாசம் சிறியதாக இருக்கலாம். அது கர்த்தர் மேல் இருக்கின்ற போது, கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார். " தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான், கர்த்தர் அவனோடே கூட இருந்தார்".அதே தேவன் இன்றும் நம்மோடும், நமது சபையின் அனைத்து ஆத்துமாக்களோடும் இருந்து எல்லா சோதனைகளையும் வெல்ல வல்லவராய் இருக்கிறார்.

"சோதனைகளை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்".

பிரியமானவர்களே "கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்" நமக்கெதிராய் செங்கடல் போன்ற பிரச்சனைகள் வரும், நம் வாழ்க்கை படகு அமிழ்ந்து விடுமளவிற்கு புயல்காற்று போன்ற பெருக்காற்று வீசாலாம். நம் படகில் ஆண்டவர் இருக்கிறார் எந்த பாடுகளும் நம்மை மேற்கொள்ள விடாமல் பாதுகாக்கும் தேவ கரம் நம்மோடு இருக்கிறது. நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள் என்று வாக்கு கொடுத்த தெய்வம்தாமே இன்றும் நம்மை எல்லா தீமைக்கு விலக்கி பாதுகாப்பார்.

"துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்து வருவதில்லை, அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான்" தேவ பெலன் கொண்டு ஜெயம் பெருவோம். கர்த்தர் இந்த ஆண்டை ஆசீர்வாதமாக மாற்றி தர வல்லவர். – ஆமென்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர்
**ஜெயசேகர்**

# புத்தாண்டு கவிதை

நல்லவரே இயேசு நல்லவரே
இக்கட்டு நாளில் நல்லவரே
தம்மை நம்பும் யாவருக்கும்
நல்லவரே . . .

இயேசு நுகங்களை முறிப்பவரே
உன் கட்டுகளை அறுப்பவரே
அரணும் கோட்டையும் அவரே . . .

இயேசு நித்தமும் நடத்திடுவாரே
கரம் பிடித்தவர் கைவிடாரே
நன்மைகள் வாழ்வில் செய்வாரே . . .

ஆபிராகாமை பெருகச்செய்தாரே
நம்மையும் திரளாய்
பெருகச்செய்தாரே
ஆயிரம் ஆயிரம் ஆத்துமாக்களை
தருவாரே . . .

துதியில் மகிழச் செய்வாரே
சபையை காக்கும் தேவன் அவரே
தொடர் நன்றி சொல்ல வைப்பவரே . .

வாக்குதத்தத்தில் உண்மையானவரே
வாக்கு மாறாத தேவன் அவரே
புதிய நன்மைகள் தருவாரே . . .

புதிய வருடத்தில் சத்தியம்
அருள்பவரே
துஷ்டன் இல்லை துஷ்டன் இல்லை
உன் வாழ்வில் துஷ்டன் இனி இல்லை
என்றவரே . . .

இயேசு நம்வாழ்வில்,
குடும்பங்களில், சபையில்,
தேசத்தில் என்றென்றும்
இருப்பாரே . . .

–ஆமென்

ஜெப ஊழியன்
**சகோ.எபினேசர்**

## தேவ செய்தி

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்ளுகிறேன். கடந்த வருடம் முழுவதும் நம் ஜெபத்தைக் கேட்டு அற்புதங்கள் செய்து கைவிடாமல் வழி நடத்தின தேவன் இந்த புதிய வருடத்திலும் மென்மேலும் ஆசீர்வாதங்களை கொடுத்து வழிநடத்துவாராக.

ஆண்டவர் இந்த புதிய வருடத்தின் வாக்கு தத்தத்தமாக நம் சபைக்கு கொடுத்த வார்த்தை

"துஷ்டன் இனி உன்வழியாய் கடந்து வருவதில்லை அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான்" என்பதாகும். (நாகூம் 1:15)

நம் ஆண்டவருக்கும் நமக்கும் முதல் எதிரி பிசாசு ஆகும். அவனைத்தான் இந்த வசனம் துஷ்டன் என்று குறிப்பிடுகிறது. ஆம் நம் ஆண்டவர் பரிசுத்தமுள்ளவர். ஆனால் பிசாசோ அசுத்தமானவன். நம் ஆண்டவர் ஜோதிகளின் பிதா ஆனால் பிசாசோ அந்தகாரத்தின் தகப்பன். நம் ஆண்டவர் நல்லவர் ஆனால் பிசாசோ துஷ்டன். நம் ஆண்டவர் நமக்கு வாழ்வு கொடுப்பவர் ஆனால் பிசாசோ மரணத்தை பரிசளிப்பவன். ஆகவே அன்பு சகோதர, சகோதரிகளே இந்த புதிய வருடத்திலே நாம் ஆண்டவரை அண்டிக்கொள்வோம். அப்பொழுது பிசாசு நம்மிடத்தில் எந்தவிதமான கிரியைகளையும் செய்ய முடியாது. நாம் வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ்வோம். பிசாசாகிய துஷ்டனை மேற்கொண்டு வாழ்வதற்கு நாம் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை கீழ்வரும் பகுதியிலே காணலாம்.

### 1.பிசாசை எதிர்த்து நில்லுங்கள்......

பரிசுத்த யாக்கோபு கூறுகிறார் " தேவனுக்கு கீழ்படிந்திருங்கள் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப் போவான். (யாக்–4:7)

ஆம் பிரியமானவர்களே, நாம் எந்த சூழ்நிலையிலும் பிசாசுக்கு இடங்கொடுக்க கூடாது."அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளுங்கள்.

ஆண்டவர் பக்கம் நம்மை இணைத்துக் கொள்ளுகின்றபொழுது பிசாசுக்கு நம்மிடத்தில் வேலையில்லை.

"தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான் என்று அறிந்திருக்கிறோம். தேவனால் பிறந்தவன் தன்னை காக்கிறான். பொல்லாங்கன் அவனைத் தொடான்" (1-யோவா-5:18)

கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் அல்ல துரைத்தனங்களோடும்,அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தோடும் அந்தகார லோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு. ஆகையால் தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையம் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதி என்னும் மார்க்கவசத்தை தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாத ரட்சையை கால்களில் தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடதக்கதாய் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசம் என்னும் கேடகத்தையும் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சண்யம் என்னும் தலைச்சீராவையும் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்த சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும் விண்ணபத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மண உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். இவைகளை செய்கின்ற பொழுது துஷ்டனாகிய பிசாசு சங்கரிக்கப்படுவான். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில் உன் எதிராளியாகிய பிசாசானவன் கெர்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ? என்று வகை தேடி சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாய் இருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். (1-பேது-5:8,9) இயேசுவை பிசாசு உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய் உலகத்தின் எல்லா இராஜ்ஜியங்களையும் காண்பித்து தன்னை தாழ்ந்து

பணிந்து கொண்டால் எல்லாவற்றையும் தருவேன் என்று சொன்ன பொழுது இயேசு அப்பாலே போ சாத்தானே எனக்கு பின்னாலே போ என்று சாத்தானை விரட்டி அதற்கு எதிர்த்து நின்றார் அதைக் கேட்ட சாத்தான் ஓடிப் போனான். நாமும் சாத்தானை எப்பொழுதும் எதிர்த்து நிற்க வேண்டும். அப்பொழுது ஜெயம் பெறுவோம்.

## 2.இயேசு பிசாசை ஜெயித்தவர்.........

ஏதேன் தோட்டத்தில் பிசாசு ஆதாமையும் ஏவாளையும் ஏமாற்றி ஆண்டவர் சமூகத்தை விட்டு அவர்களை பிரித்தபொழுது ஆண்டவர் " உனக்கும் ஸ்திரீக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் அவர் உன் தலையை நசுக்குவார் நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்றார். (ஆதி-3:15) அதன்படி சிலுவை மரத்திலே இரத்தம் சிந்தி இயேசு கிறிஸ்து பாடுகளை அனுபவிக்கின்றபொழுது பிசாசின் தலை நசுக்கப்பட்டது. சத்துரு முழுவதும் சங்கரிக்கப்பட்டான்.

பிரியமானவர்களே, ஆண்டவர் சிலுவையில் நமக்கு செலுத்தின பரிகாரத்தினால் துஷ்டன் நம் வழியாய் கடந்து வராதபடிக்கு காத்துக்கொண்டார். நம் தேவனுடைய அன்பு விலையேறப்பெற்றது. உலகத்தில் அவர் வாழ்ந்தபொழுது பிசாசுகளும் நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சத்தமிட்டு அனேகரை விட்டு புறப்பட்டது. அவரை கிறிஸ்து என்று பிசாசுகள் அறிந்திருந்தபடியால் அவர் அவைகளை பேசவொட்டாமல் அதட்டினார். (லூக்-4:41) பிசாசின் நாவினால் துதி உண்டாவதை இயேசு ஒருபோதும் விரும்பியதில்லை. காரணம் இந்தப்பிசாசினால்தான் மனுக்குலத்திற்கு சாபம் வந்தது. அதனால்தான் இயேசு கிறிஸ்து மனு உருக்கொண்டு இந்த உலகத்திற்கு வரவேண்டிய சூழ்நிலை உருவானது. இதை விசுவாசித்து இயேசுவை ஏற்றுக்கொள்ளுகிற விசுவாசிகளின் நாவில் துதி உண்டாவதை இயேசு ஏற்றுக்கொள்ளுகிறார்.

ஒரு முறை பிசாசு பிடித்த ஒரு மனிதனை ஆண்டவரிடம் கொண்டு வந்தார்கள். அப்பொழுது அந்த பிசாசு ஐயோ, நசரேயனாகிய இயேசுவே எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களை கெடுக்கவா? வந்தீர் உம்மை இன்னாரென்று அறிவேன். நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று உரத்த சத்தமிட்டது. அதற்கு இயேசு நீ பேசாமல் இவனை விட்டு புறப்பட்டு போ என்று அதை அதட்டினார். அப்பொழுத பிசாசு அவனை ஜனங்களின் நடுவே விழத்தள்ளி அவனுக்கு ஒரு சேதமும் செய்யாமல் அவனை விட்டு போய் விட்டது. எல்லாரும் ஆச்சரியப்பட்டு இது என்ன வார்த்தையோ? அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார். அவைகள் புறப்பட்டு போகிறதே

என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். (லூக்-4:34,35) இயேசு சொன்னார் "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளை துரத்துகிறபடியால் தேவனுடைய இராஜ்ஜியம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" என்று (மத்-12:28)

ஆம் பிரியமானவர்களே, நம் ஆண்டவரை பார்த்தாலே பிசாசுகள் நடுநடுங்கும். நம் ஆண்டவர் வார்த்தையாக இருக்கிறார். அதனால் வார்த்தையை கேட்டவுடனே பிசாசுகள் நடுநடுங்குகின்றன. அல்லேலூயா.(யாக்-2:19)

ஆம் நம் ஆண்டவர் பிசாசின் தலையை நசுக்கினவர். வெளிப்படுத்தின
விசேஷத்தில் இந்த பிசாசையையும், பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தையும், மிருகத்தையும் கள்ள தீர்க்கதரிசியையும் அக்கினியும், கந்தகமுமான கடலிலே தள்ளி அழித்துப் போடுகிறார். (வெளி-20:10)

## 3. நமக்கும் அந்த அதிகாரத்தை கொடுக்கிறார்......

துஷ்டனான பிசாசை எதிர்க்கவும் அவனை அழிக்கவும் தனக்கு இருக்கிற அதிகாரத்தை அவருடைய விசுவாசிகளாகிய நமக்கும் ஆண்டவர் பரிசாக தந்திருக்கிறார். எவ்வளவு சந்தோஷமான நற்செய்தி இது பாருங்கள். இனி பிசாசை பார்த்து பயப்படவேண்டிய அவசியமில்லை. அவன் எந்த ரூபத்தில் நமக்கு எதிராக வந்தாலும் அவனை அடித்து விழத்தள்ளி ஜெயமெடுக்க தேவாதி தேவன் நம்மோடு கூட இருக்கிறார். அல்லேலூயா.
"விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன என் நாமத்தினாலே பிசாசாசுகளை துரத்துவார்கள்" என்று இயேசு கூறி-னார். (மாற்கு-16:17)
ஒரு முறை இயேசுவின் சீஷர்கள் 70 பேர் அவரிடத்தில் வந்து பிசாசுகள் எங்களுக்கு கீழ்படிகிறது என்று சொன்னார்கள். அப்பொழுது இயேசு சாத்தான் மின்னலை போல வானத்திலிருந்து விழுகிறதை கண்டேன். இதோ சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும் சத்துருவினுடைய சகல வல்லமைகளையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன். ஒன்றும் உங்களை சேதப்படுத்த மாட்டாது. ஆகிலும் ஆவிகள் உங்களுக்கு கீழ்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல் உங்கள் நாமங்கள்

பரலோகத்தில் எழுதியிருப்பதற்காக சந்தோஷப்படுங்கள் என்றார். (லூக்-10:17-20)

ஒரு முறை சந்திரரோகியாய் கொடிய வேதனைப்பட்ட ஒரு மனிதனை ஆண்டவரிடம் கொண்டு வந்தார்கள். அவனுக்குள் இருந்த பிசாசு அவனை அடிக்கடி தீயிலும் தண்ணீரிலும் விழத்தள்ளி கொல்லப் பார்த்தது. சீஷர்களால் அதை துரத்த முடியாமல் போனது. அப்பொழுது இயேசு வந்து ஒரே வார்த்தையினால் அதை துரத்தினார். அப்பொழுது சீஷர்கள் ஏன் தங்களால் துரத்த இயலவில்லை என்று கேட்டபொழுது இயேசு சொன்னார் இதை துரத்த முடியாததற்கு ஒரே காரணம் உங்களுடைய அவிசுவாசம் என்று (மத்-17:15-20)

ஆம் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்து பிசாசின் தலையை நசுக்கினார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். அதே விசுவாசத்தோடு பிசாசை நாம் துரத்த வேண்டும். அப்பொழுது இயேசு கிறிஸ்துவின் வல்லமை நம் மூலமாக வெளிப்பட்டு பிசாசை துரத்திவிடும்.

ஆகவே நாமும் நம்மை பரிசுத்தமாய் காத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். எப்பொழுதும் பரிசுத்த ஆவியினால் நிரம்பினவர்களாய் நடந்து திரிய வேண்டும். நம் சரீரத்தை நாம் வெறுமையாக வைத்திருப்போமென்றால் ஒரு பிசாசு போய் 7 பிசாசுகளை அழைத்து வந்து நம்மை செயலிழக்க செய்து விடும். (மத்-12:43,44) பரிகரிக்கப்பட்ட சத்துரு பரிகரிக்கப்பட்டவனாகவே இருக்க வேண்டும். நம்மை விட்டு விலகி ஓடிப் போன துஷ்டன் திரும்பி வரவே கூடாது. சங்கரிக்கப்பட்ட பிசாசு சங்கரிக்கப்பட்டவனாகவே இருக்க வேண்டும். அவன் தலையெடுக்கவே கூடாது. அது நம் கையில்தான் இருக்கிறது. ஆண்டவர் நமக்கு வாக்குத் தத்தம் தந்திருக்கிறார். அதை நாம் விசுவாசிப்போம். வெற்றியுள்ள வாழ்வு வாழ்வோம்.

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து 2022-ஆம் வருடத்தை வெற்றியுள்ள வருஷமாக கடந்து செல்ல கிருபை பாராட்டுவாராக.

கிறிஸ்துவின் பணியில்
அன்பு சகோதரன
S.ஸ்டாலின்

"துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்துவருவதில்லை . . ."
நாகூம் 1:15.

"... உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத்தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன்; ... " (எரே – 15:20)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோ. ஜெகன்
சகோதரி. ஜெனிஷா ஜான்
செல்வன். ஆல்வின் டேவிட் மணிராஜ்
செல்வி. ஷாரோன் ஜெனீஃபர்
சகோ. இயேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
செல்வன். ஜெய்ரஸ் பால்
சகோதரி. சுசீலா லாசர்
சகோ. ஐசக்துரை
சகோதரி. நவிதா பால்ராஜ்
செல்வன். ஜோஷுவா ஜவல்சிங்
செல்வி. ஜெனட் ஆரோக்கியதாஸ்
சகோ. சுபின் சிங்
செல்வி. பிரின்ஸி கமலதாசன்
செல்வி. சுனிதா சுந்தர்ராஜ்
செல்வன்.ஜான் லெவின்

சகோ. ஆரோக்கியராஜ்
சகோ. செங்குட்டுவன்
சகோ. ராஜ்
சகோதரி. ஜோன் ஆப் ஆர்க் அசோக்குமார்
சகோதரி. சுமதி ஐசக் துரை
செல்வி. ஷெரீன் பெனிடா ஸ்டாலின்
சகோதரி. விக்டோரியா ராஜன்
செல்வி. சாரா ஆல்வின்
செல்வன். சாமுவேல் ஆல்வின்
செல்வி. அக்சாள் நிசி எபிநேசர்
சகோதரி. எப்சிபா ஸ்டீபன்
செல்வி. அபிகாள் கிரேஸ் ஜஸ்டின்
சகோதரி. பிரிஸ்சில்லா செங்குட்டுவன்
சகோதரி. அஃபியா சுனில்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிராக வெங்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

திருமதி – திரு. தம்புகுமார் டென்னிஸ்
திருமதி – திரு. சாம் ஆனந்த்
திருமதி – திரு. வில்கின்ஸ் தினகரன்
திருமதி – திரு. மணிராஜ்
திருமதி – திரு. சாமுவேல்
திருமதி – திரு. வின்ஸனட் சுவீட்
திருமதி – திரு. ஷர்மன்ராஜ்
திருமதி –திரு. இயேசுரெத்தினம்
திருமதி – திரு. கனீஷ் ஜோஸ்வா அமலன்
திருமதி –திரு. தினேஷ் குமார்
திருமதி – திரு. பால் ராஜேஷ்
திருமதி – திரு. வேளாங்கன்னி

# 2022 ஜனவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 6:30 முதல் இரவு 8:00வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/01/2022 | சகோ.ஜான் கெட்சன் | சகோ.பிராங்கிளின் (NBTC) |
| 09/01/2022 | சகோ.வேலு ராமர் | சகோ.தாமஸ் |
| 16/01/2022 | சகோ.காட்டீஸ் | சகோ.எபிநேசர் |
| 23/01/2022 | சகோ.பிரசாத் | சகோ.பிராங்கிளின் (MOH) |
| 30/01/2022 | சகோ.ஆந்தோனி | சகோ.ஆரோக்கிய ராஜ் |

## வெள்ளி ஆராதனை நேரம் காலை 9:45 முதல் 11:30 வரை மாலை 3:00 முதல் 5:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/01/2022 | சகோ.கிறிஸ்டோபர் | சகோ.ஆரோக்கிய தாஸ் |
| 14/01/2022 | சகோ.டேவிட் | சகோ.ஸ்டீபன் |
| 21/01/2022 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28/01/2022 | சகோ.சுகுமார் | சகோ.ஜகன்நாதன் |

**13/01/2022 அன்று முழு இரவு ஜெபம் ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம் – இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**22/01/2022 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை

**28/01/2022 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

(இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம்– வெள்ளிகிழமை காலை ஆராதணைக்கு பின்

15 வயதிற்கு கீழுள்ள சபையின் பிள்ளைகளுக்கு நமது சபை வீட்டில் வைத்து அனைத்து வெள்ளிகிழமைகளிலும் காலை 9:45 மணி முதல் மதியம் 11:30 மணி வரை ஆராதனை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது பெற்றோர்களுடன் ஆராதணையில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்று செல்லவும், ஞாயிறு ஆராதனை தற்சமயம் சபை வீட்டில் வைத்த மாலை 6:30 :மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது செவ்வாய் கிழமைகளில் குடும்ப ஆசீர்வாத ஜெபம் மாலை 6:30 மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது அணைவரும் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்லவும் ( சபையின் அணைத்து ஆராதணையிலும் தவறாமல் கலந்து கொள்ளவும்)

# 2022 ஜனவரி மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



**1.இஸ்ரவேல் தேசத்தின் எல்லை எது?**

**2.அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்க அனுப்பப்பட்டவன் யார்?**

**3.தாவீதை, பொன் வெள்ளியோடு சுகசெய்தி விசாரித்த ராஜா யார்?**

**4.தாவீதின் மனுஷர் விக்கிரகங்களை சுட்டெரித்த இடம் எது?**

**5.தன் வேலைக்காரனுக்கு தன் பங்கை விட்டு கொடுத்தவன் யார்?**

**6.வயிற்றிலே குத்தி கொள்ளப்பட்டவர்கள் யார்?**

**7.தாவீதின் தலையில் எந்த ராஜாவின் கிரீடம் வைக்கப்பட்டது**

**8. IIசாமுவேல் 24-ம் அதிகாரத்திற்கு இணையான சங்கீதம் எது?**

**9.கிபியோனியர் கேட்ட பிராயச்சித்தம் என்ன?**

**10.அப்சலோம் தாவீது ராஜாவை பார்க்காமல் எத்தனை வருடங்கள் இருந்தான்?**

**11.தாவீதுக்கு கப்பங்கட்டியவர்கள் யார்?**

**12.புகையும் அக்கினியும் எங்கிருந்து வந்தது?**

**13.யார் வனாந்திரத்தின் ஜனங்களின் பசியை ஆற்றினார்கள்?**

**14.தாவீது எத்தனை வயது வரை ராஜாவாயிருந்தான்?**

**15.கிணற்றினுள்ளே ஒளிந்து தப்பித்தவர்கள் யார்?**

**விடைகளை வருகின்ற** 20-01-2022**க்குள்**
(WhatsApp #65040638) **என்ற எண்ணுக்கு பெயருடன் குறிபிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் IIசாமு 4-24 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்**

**- - -தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; -மத்தேயு *7:7***

## 2021 –டிசம்பர் மாத வேத வினாவுக்கு விடை

1.ஐசுவரியத்தின் படி, குறைவையெல்லாம் –பிலி 4:19

2.இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்ததோர் பூமியின் கீழானோருடைய

முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும் – பிலி 2:10

3. பிலிப்பியர் 3:2

4.ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் –பிலி 4:6

5.ஜீவன், சாவு – பிலி 1:21

6.தவறு – பிலி 3:7

7.தவறு – பிலி 2:16

8.நஷ்டம், குப்பை – பிலி 3:11

9. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள்

என்று மறுபடியும் சொல்லுகிறேன். –பிலி 4:4

10.தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தய பொருளுக்காய் – பிலி 3:14

11.தவறு – பிலி 2:18

12.சரி – பிலி 3:6

13.தவறு – பிலி 2:7

14.தவறு – பிலி 3:6

15.தேவனுடைய –பிலி 2:6

## 2021 டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis.பிரிசீலா செங்குட்டுவன்
Sis.மெர்ஸ்லின் தயா இயேசுரெத்தினம்

## தெரிந்து கொள்வோம்

### யார் இந்த தந்தை பெர்கமான்ஸ்?

தந்தை SJ பெர்கமான்ஸ் Bio- Data
பிறந்த நாள்: ஆகஸ்ட் 3-1949
பிறந்த ஊர்: சூசைபட்டி, மதுரை
பெற்றோர் வேலை: விவசாயம்
படித்தது : 12ம் வகுப்பு (PUC) பின்பு வேதாகம கல்லூரியில் இணைந்து கத்தோலிக்க போதகருக்கான படிப்பை தொடர்ந்தார்.
படித்த பள்ளி: செயின்ட் மேரீஸ் உயர் நிலைப்பள்ளி, மதுரை
பார்த்த வேலை: கத்தோலிக்க பாதிரியார்
கத்தோலிக்க பாதிரியாரன வருடம் :1974
இரட்சிக்கப்பட்ட வருடம்: 1983
யார் மூலமாக?: சகோதரர் DGS தினகரன் அவர்கள்
வெளியிட்ட இசைத்தட்டுகள் : 50க்கும் மேல்
பாடல்கள்:450 கும் மேல்
மொழிகள்: தமிழ், இந்தி, தெலுங்கு, கன்னடம், சிங்களம் (இவர் பாடல் பலரால் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது)
இருக்கும் இடம்: காளையர் கோயில், சிவகங்கை மாவட்டம்
திருமணம் : இல்லை
இருக்கும் இடம் : காளையார்கோவில் பகுதி மக்கள் ஊழியத்திற்க்காக கொடுத்தது 5 ஏக்கர் நிலம்.
இடத்தின் பெயர்: ஜெபத்தோட்டம்

1991ம் வருடம் கத்தோலிக்க போதக பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார் ஆனால் அதை பற்றி கவலைபடாமல் இன்றும் தேவனுக்காக உழைத்து வருகிறார். இவர் பாடல்களின் விசேஷம் பரிசுத்த வேதாகமத்தை மையமாக வைத்தே பாடல்களை எழுதிவருகிறார் . படிக்காத பாமரர் முதல் படித்த மேதைகள் வரை இவர் பாடல்கள் பாடி தேவனை மகிமைபடுத்துகின்றனர்.

இந்த சாட்சியை படிக்கும் சகோதர சகோதரிகளே . . . நீங்கள் தாலந்து படைத்தவராக இருக்கலாம். இதை தேவனுக்கென்று படைக்கும் போது நிச்சயம் தேவன் உங்களை உயர்த்துவார்.
அவரிடம் உங்களை ஒப்புகொடுங்கள். நிச்சயம் உங்கள் வாழ்வில் தேவன் அளிக்கும் மாற்றத்தை உணர்வீர்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

-ஆமென். . .

# உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை

கிறிஸ்துவுக்கு பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே இந்த தேவ செய்தியின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் நம்மோடு இடைபடுவாராக. ஆமென்.

ஆதியாகமம் புஸ்தகத்தில் நாம் வாசிக்கின்றோம் கடவுள் எவ்வளவு அழகாய், நேர்த்தியாய் ஒவ்வொன்றாய் உருவாக்கினார். பின்பு பிதாவாகிய தேவன் ஆணும் பெண்ணுமாய் ஆதாமையும் ஏவாளையும் உருவாக்கினார்.

## 1.உலக இச்சையில் விழுந்த ஆதி மனிதர்கள்.....

விசேஷமாய் ஆதாமை மண்ணை பிசைந்து தம்முடைய சுவாசத்தை ஊதினார் அதனிமித்தம் அவன் ஜீவாத்துமாவானான். பின்பு அவனிலிருந்து ஏவாளை உருவாக்கினார்.

பிரியமானவர்களே, இதிலிருந்து நாம் என்ன புரிந்து கொள்ள வேண்டுமென்றால் தேவன் அவருடைய சித்தத்தின்படி, அவருடைய விருப்பத்தின்படி மிகவும் சந்தோஷமாய் சகலத்தையும் உண்டாக்கினார்.

எந்த அளவுக்கு ஆண்டவர் சந்தோஷப்பட்டார் என்றால் ஆதியாகமம் 1:31 அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாய் இருந்தது.

ஆதி மனிதர்களான ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் தம்மைப் போல சிந்திக்கவும், செயல்பட கூடிய சுதந்திரம் கொடுத்திருந்தார். அதனோடு கூட கீழ்ப்படிய வேண்டுமென்ற கட்டளையும் கொடுத்தார். "பின்பு தேவன் நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதி–1:26) தேவன் உண்டாக்கின சகல ஆசீர்வாதங்களையும் அவர்கள் சுதந்தரித்தார்கள்.

ஒருநாள் வந்தது சத்ரு சொன்ன ஒரே ஒரு ஆசை வார்த்தையின் நிமித்தம் ஏவாளும், ஆதாமும் தேவனுக்கு கீழ்படியாமல் இச்சையில் விழுந்து போனார்கள். "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1–யோவா–2:17)

## 2.உலகம் சிநேகம் கொண்ட சிம்சோன்........

சிம்சோனைப் பற்றி கர்த்தர் சொன்ன வார்த்தை என்னவென்றால் "நீ கர்ப்பம் தரித்து ஒரு குமாரனை பெறுவாய் அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படலாகாது. அந்த பிள்ளை பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனாய் இருப்பான்.

அவன் இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்க தொடங்குவான் என்றார்" (நியாதி–13:5)

தேவ ஆவியை பெற்ற சிம்சோன் தன் கண்களால் கண்டதை இச்சித்து அதை சாப்பிட்டான். "இதோ சிங்கத்தின் உடலுக்குள்ளே தேனின் கூட்டமும் தேனும் இருந்தது" (நியாதி–14:8)

அவன் அதை தன் கைகளில் எடுத்து சாப்பிட்டுக்கொண்டே நடந்து தன் தாய் தகப்பனிடத்தில் வந்து அவர்களுக்கும் கொடுத்தான். (நியாதி–14:9) இறுதியாக உலகப்பிரகாரமான சிநேகத்தால் சிம்சோன் தேவன் தனக்கு அருளிய பலத்தை இழந்தான் என்று நாம் பார்க்கிறோம்.

" தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி சவகரன் கத்தி என் தலையின் மேல் படவில்லை. நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்தது முதல் நசரேயானவன். என் தலை சிரைக்கப்பட்டால் என் பலம் என்னை விட்டுபோம" (நியாதி–16:17)

வசனம் சொல்கிறது வாசிப்போம் யாக்–1:15 பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும் பாவம் பூரணமாகும் போது மரணத்தை பிறப்பிக்கும்.

## 3. உலகத்தை ஜெயித்த இயேசு கிறிஸ்து.....

இயேசு கிறிஸ்து 40 நாள் வனாந்திரத்தில் உபவாசத்தோடு தனித்திருந்த பின்பு அவர் பிசாசினால் சோதிக்கப்பட்டார். உலக இச்சைகளை பிசாசு அவருக்கு காண்பித்தான் அவர் அவைகளை சத்திய வசனத்தினாலே மேற்கொண்டார். "அவர் இரவும் பகலும் 40 நாள் உபவாசமாய் இருந்த பின்பு அவருக்கு பசியுண்டாயிற்று" (மத்–4:2)

ஒரு முறை ஜனங்கள் அவரைப் பிடித்து ராஜாவாக்க மனதாயிருந்தார்கள். ஆனால் அவர் அங்கிருந்து விலகிப் போய்விட்டார். " ஆதலால் அவர்கள் வந்து தம்மை ராஜாவாக்கும்படி பிடித்துக்கொண்டு போக மனதாயிருக்கிறார்கள் என்று இயேசு அறிந்து மறுபடியும் விலகி தனியே மலையின் மேல் ஏறினார்" (யோவா–6:15)

பின்பு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய சீஷர்களிடத்தில் தன் மரணத்தை குறித்து சொன்னார். அப்பொழுது பேதுரு அவரை கடிந்து கொண்டான். "அவரோ திரும்ப பேதுருவைப் பார்த்து எனக்கு பின்னாக போ சாத்தானே நீ எனக்கு இடறலாயிருக்கிறாய் தேவனுக்கு ஏற்றவைகளை சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளை சிந்திக்கிறாய்" என்றார்.(மத்–16:23)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட உலகத்திற்கு ஒத்த காரியத்துக்கு இசைந்து போகாமல் அவைகளின் மேல் ஜெயமெடுத்தார். இயேசுவின் சீஷனான யாக்கோபு பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு சபைகளுக்கு சொல்லும் காரியம் என்னவென்றால் வாசிப்போம் யாக்–4:4 விபசாரரே, விபசாரிகளே உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்று அறியீர்களா? ஆகையால் உலகத்திற்கு சிநேகதினாய் இருக்க விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாகிறான்.

ஏன்? தேவன் இப்படிபட்ட கடினமான வார்த்தைகளை பயன்படுத்துகின்றார் என்ற கேள்வி நமக்குள் வரலாம். தேவனுக்கு பிரியமானவர்களே, ஏன் தெரியுமா? அவர் அந்த அளவிற்கு நம்மேல் நேசம் கொண்டிருக்கிறார். அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

"இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனை பகைத்து மற்றவனை சிநேகிப்பான் அல்லது ஒருவனை பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும், உலகப்பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது" (மத்-6:24) அன்பான தேவ பிள்ளைகளே நாம் எப்படியிருக்கின்றோம்.ஆதாம் ஏவாள் மற்றும் சிம்சோன் இவர்களைப் போல உலகத்துக்கு இசைந்து தேவனுக்கு கீழ்படியாமல் போகிறோமா? இல்லை நம்முடைய இரட்சகராகி இயேசு கிறிஸ்துவை போல உலக இச்சகைளை வசனத்தைக்கொண்டு ஜெயிக்கிறவர்களாக இருக்கின்றோமா? நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

இயேசுவைப் போல உலகத்தை ஜெயிக்க என்னை நான் அர்ப்பணிக்கிறேன். நீங்களும் அர்ப்பணிப்பீர்கள் என்று கர்த்தருக்குள் நான் விசுவாசிக்கிறேன். ஆமென்.
அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்.

வாலிபம் இயேசுக்கே.

## சகோதரிகள் பகுதி

## சர்வ வல்லவருடைய ஆசீர்வாதங்கள்

கர்த்தருக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே இந்த செய்தியின் வாயிலாக இந்த புதிய ஆண்டில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி கர்த்தருடைய நாமம் மாட்சிமை அடைவதாக.
"நீங்கள் பலுகிப் பெருகி, . . . ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவாகளை ஆசீர்வதித்தார்". ஆதி – 1:28.

ஆம் பிரியமானவர்களே இந்த ஆண்டில் தேவனுடைய கரம் பலத்த விதமாய் உங்கள் மேல் இருக்கும்இ அவர் அருளும் அபிஷேகம் உங்களுக்கு முன்பாக காணப்படும்.

கட்டுகளனைத்தையும் அறுக்கும். தேவனுடைய ஆவியானவர் வல்லமையாய் அசைவாடுவார். அடைபட்ட வாசல் ஒவ்வொன்றும்

திறக்கப்படும். சிவந்த சமுத்திரம் பிளந்து வழிவிடும். யோர்தான் பெருவெள்ளமாய் ஓடும்போது நீங்கள் அதனைக் கடந்து செல்வீர்கள்.

இந்த ஆண்டு வெற்றியின் ஆண்டு கர்த்தர் உங்களைத் தமக்குப் பிரியமான கருவியாகப் பயன்படுத்துவார். அதன் பயனாக உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் மாபெரும் மாற்றம் உண்டாகும். தேவனுடைய இரட்சிப்பும் அவருடைய சமாதானமும் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆளுகை செய்யும். உங்கள் வேலையிலும், தொழிலிலும் உயர்வு உண்டாகும். தேவனுடைய வார்த்தையின்படிச் செய்ய கவனமாகவும், விழிப்பாகவும் இருந்து, உங்கள் பிள்ளைகளோடு உயர்வான இடத்திற்கு உயர்த்தப்படுவீர்கள். தேவன் உங்களைக்குறித்து எவ்வளவு வைராக்கிய வாஞ்சையாய் இருக்கிறாரென்பதை உங்களைக் காண்கிற ஜனங்கள் வெளியரங்கமாய் அறிந்து கொள்வார்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து, உங்களைப் பலுகவும் பெருகவும் பண்ணுவார். நீங்கள் இந்த பூமியை நிரப்பி,அதனைக் கீழ்ப்படுத்துவீர்கள். தேவனுடைய பிள்ளையாய் இருக்கிற நீங்கள், சகலவற்றின் மீதும் ஆதிக்கம் செலுத்துவீர்கள். சாத்தானின் வல்லமைகளுக்கு விரோதமாக யுத்தஞ்செய்யும்படி முன்னணியாத் திகழ்வீர்கள். சாத்தான் உங்களிடமிருந்து திருடிச் சென்ற தேவனுடைய ஆசீர்வாதங்கள் அனைத்தையும் ஒன்றும் குறையாமல் மீட்டுக் கொள்ளுவீர்கள், குடும்பமாக ஒன்று கூடி , தேவனுக்குச் சமீபமாய் சேர்ந்து, தேவனை உண்மையும் உத்தமுமாய்ச் சேவிக்கும்படி உங்கள் வாழ்க்கையை அவருக்கென்று மறுபடியும் பிரதிஷ்டை செய்கிற ஒரு ஆண்டாக காணப்படும்.

இருளில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஜனங்களுக்கு தேவனுடைய அன்பைப் பறைசாற்றும்படி, தேவ ஆவியானவரின் கரங்களைப் பிடித்து, அவரோடு கூட நடக்கும் அற்புதமான ஆண்டாய் இருக்கும்.

கர்த்தாவே, திரளான ஆசீர்வாதங்களால் எங்களை ஆசீர்வதிக்கிறீர். உமக்கு நன்றி . . .
கர்த்தர் ஆசீர்வாதங்களை அருளும்போது எவரும் அதனைத் தடுக்க இயலாது.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி,
ஜீன் நிஷா கிரண்குமார்.

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில

















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்
சகோ. ஜெயசேகர்
96646444

செயலாளர்
சகோ. இயேசு ரெத்தினம்
23924262 - 97545812

பொருளாளர்
சகோ. ஜெகநாதன்
66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி
சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன்
67792009 - 56640551

வாலிப ஐக்கிய தலைவர்
சகோ. பிரசாத் சுந்தரேசன்
60781168

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only